# 23. சரவணபவன்

பன்னிரு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இந்துள மாமலர் சந்தத மணிபர
மேந்த்ர ஷடாநநமின்
இலகு துவாதச ஹஸ்த சரோருக
வேரல ரம்பகமா
மந்திர வேலவ சுந்தர சேகர
மண்டல குண்டலகோ
மாகதர் புகழ்கிரு பாகர சீதர
மாலரி சோதரியின்

---

1. **பரமேந்த்ர** – வடநூான் முடிபு. **சரோருகம்** - தாமரை

**மைந்த குணாலய வண்டர் செனாபதி**
**மங்கல மஞ்சிதநன்**
**மாதவர் சேதன காரண பூரண**
**மான்மக ளன்பகுக**
**கந்த பராபர சந்திர நூபுர**
**கண்டக ரந்தகவெண்**
**காடுறை வோர்குரு நாத வெனக்கருள்**
**கனசர வணபவனே.**

இந்துள மாமலர் சந்ததம் அணி பர
மேந்த்ர ஷடாநந மின்
இலகு துவாதச ஹஸ்த சரோருக
ஏர் அலர் அம்பகமா
மந்திர வேலவ சுந்தர சேகர
மண்டல குண்டல கோ
மாகதர் புகழ்கிரு பாகர சீதர
மால் அரி சோதரியின்
மைந்த குணாலய அண்டர் செனாபதி
மங்கல மஞ்சித நன்
மாதவர் சேதன காரண பூரண
மான் மகள் அன்ப குக
கந்த பராபர சந்திர நூபுர
கண்டகர் அந்தகவெண்
காடு உறைவோர் குருநாத எனக்கு அருள்
கன சரவணபவனே.

சிறந்த கடம்ப மலரை எப்போதும் அணியும் மேலான அரசே! ஆறுமுகனே! ஒளி விளங்கு பன்னிரு கையனே! அழகிய தாமரை மலர்க் கண்ணா! மகா மந்திரமே! வேலவனே! அழகான முடியுடையவனே! மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள அரசர்களும், துதி பாடுவோர்களும் புகழ்கின்ற கருணாகரனே! திருமகள் கணவனான பெரிய அரியின் சகோதரியான உமாதேவியின் மகனே! மூல காரணமானவனே! முழு நிறைவான பொருளே! மான் மகளான வள்ளியின் காதலனே! குகனே! கந்தனே! பராபரனே! பொன் சிலம்பணிந்தவனே! அசுரர்களின் இயமனே! சுடுகாட்டில் வாழுகின்ற சிவபெருமானின் குருநாதனே! அடியேனுக்கு அருள்புரியும் பெருமையான சரவணபவனே! 1

1. **மஞ்சித** – மஞ்சு + இத எனப்பிரித்துக் கொள்க. **மஞ்சு** = அழகு. **இதம்** = உரிமை

**மிக்க சுவேத விடைக்கட வுட்கு**
**விருப்புடை யேணமலை**
**மெச்சிடு வர்க்கருள் சித்திர விசித்திர**
**விலாச சதாவிசத**
**முக்க ணுருத்திரை யற்புத வித்தக**
**முக்ய வுமைக்கினிய**
**முருக வரைக்குற மகண்மரு வத்தமுன்**
**முதலவ வித்துருமச்**
**செக்கர் நிறப்பத முத்தைய சத்திய**
**செச்சை மணக்குமெழிற்**
**சிந்துர வடிவ சிகாவள வாகன**
**சிற்பர தற்பரசேய்**
**உக்க விலோதன நித்யகல் யாணமெய்**
**யோக தயாளகுண**
**ஒப்பறு விறலயி லிறைவ வெனக்கரு**
**ளொருசர வணபவனே.**

*மிக்க சுவேத விடைக் கடவுட்கு*
*விருப்புஉடை ஏணமலை*
*மெச்சிடுவர்க்கு அருள் சித்திர விசித்திர*
*விலாச சதாவிசத*
*முக்கண் உருத்திரை அற்புத வித்தக*
*முக்கிய உமைக்கு இனிய*
*முருக வரைக்குறமகள் மருவு அத்த முன்*
*முதலவ வித்துருமச்*
*செக்கர் நிறப்பத முத்தைய சத்திய*
*செச்சை மணக்கும் எழில்*
*சிந்துர வடிவ சிகாவள வாகன*
*சிற்பர தற்பரசேய்*
*உக்க விலோதன நித்ய கல்யாண மெய்*
*யோக தயாளகுண*
*ஒப்பு அறு விறல் அயில் இறைவ எனக்கு அருள்*
*ஒரு சரவணபவனே.*

---

2. **விசதம்** = வெண்மை; இஃதிங்கே தூய்மையை யுணர்த்தும்.

**குறமகள் மருவத்த** = (மணவினையாற்றலிற்) குறமகள் கரம் பொருந்திய கரமுடையாய். **உக்கம் –** உத்கம் என்னும் வடமொழி விகாரமாம்; பொருள் அக்கினி எனவாம். **விலோதனம்** = கொடி.

மிகுந்த வெள்ளைக் காளை வாகனக் கடவுளான சிவனுக்கு விருப்பம் உடைய, பெருமை பொருந்திய தேவியால், மெய்யன்பர் எனப் புகழப்படுவோர்க்கு அருள் வழங்கும் ஓவியமே! அற்புதனே! அழகனே! எப்போதும் தூய்மையான மூன்று திருக்கண்களுடைய உருத்திரையின் அற்புதனே! அறிஞனே! முக்கியமான உமையம்மைக்கு இனிய முருகனே! மலைவாழ் குறமகளான வள்ளியின் கை பொருந்திய திருக்கையனே! பழைய முதல்வனே! ஒளி பொருந்திய சிவந்த நிறத் திருவடியுடையவனே! முத்தையனே! சத்தியனே! சந்தனம் மணக்கும் அழகிய சிவந்த திருவடிவினனே! மயில்வாகனனே! அறிவான பரமே! தனக்குப் பரமே! சேயே! அக்கினியே! கொடியோனே! நித்திய கல்யாணனே! உண்மை யோகம் புரிவோனே! தயாள குணமுடையவனே! ஒப்பற்ற வீரமுடைய வேலிறைவனே! அடியேனுக்கு அருளும் ஒப்பற்ற சரவணபவனே! 2

**பங்கய வம்பகி பண்டு மனோன்மணி**
**பந்து முகைக்கௌரி**
**பரம சொரூபி விலாச வுலாச**
**பராபரை யாதிசிவ**
**சங்கரி சங்கரி தங்கை மணந்தரு**
**தாரணி காபாலி**
**தருண சகாய குணங்கெழு நாரி**
**சதாநட னானந்தி**
**புங்கவி யம்பிகை யின்ப சுமங்கலை**
**புன்க ணிலாயுவதி**
**புதுமல ரணிசிவை தனய பகோதய**
**பூரண வாரணசீர்**
**தங்கிய கிண்கிணி தண்டை சிலம்பு**
**சதங்கை முழங்குமிரு**
**சரண வெனக்கரு ளிகபர நாயக**
**சயசர வணபவனே.**

*பங்கய அம்பகி பண்டு மனோன்மணி*
*பந்து முகைக் கௌரி*
*பரம சொரூபி விலாச உலாச*
*பராபரை ஆதி சிவ*

---

**3.** பகோதய என்பதில் பகம் = ஞானம்.

*சங்கரி சங்கரி தங்கை மணந்தரு*
*தாரணி காபாலி*
*தருண சகாய குணங்கெழு நாரி*
*சதா நடன ஆனந்தி*
*புங்கவி அம்பிகை இன்ப சுமங்கலை*
*புன்கண் இலா யுவதி*
*புதுமலர் அணி சிவை தனய பகோதய*
*பூரண வாரண சீர்*
*தங்கிய கிண்கிணி தண்டை சிலம்பு*
*சதங்கை முழங்கும் இரு*
*சரண எனக்கு அருள் இகபர நாயக*
*சய சரவணபவனே.*

தாமரை மலர் போலும் திருக்கண்களுடையவள்; பழைய மனோன்மணி; பந்து போன்ற தனங்களுடைய கௌரி; பரம சொரூபமுடையவள்; அழகிய திருவிளையாடல் புரியும் பராபரை ஆதியானவள்; சிவசங்கரியானவள், பாஞ்சசன்னியம் என்னும் சங்குடைய திருமாலின் தங்கையானவள், மணம் கமழும் மாலையணிந்தவள்; காபாலி என்னும் பெயருடையவள்; தக்க சமயத்தில் உதவியருளும் குணம் பொருந்திய மாது; எப்போதும் திருக்கூத்தினைச் செய்தருளும் ஆனந்தமானவள்; தெய்வப் பெண் (பார்வதி). அம்பிகையாக உள்ளவள்; இன்பவடிவான சுமங்கலை யானவள்; துன்பம் இல்லாத குமரிப்பெண்; நாள் மலர்களை அணியும் சிவையின் புதல்வனே! ஞானத்தின் பிறப்பே! நிறைவே! கோழிக் கொடியோனே! அழகு நிலைபெற்ற கிண்கிணி, தண்டை, சிலம்பு, சதங்கை, ஒலிக்கும் திருவடியுடையவனே! அடியேனுக்கு அருள்புரியும் இம்மைக்கும் மறுமைக்கும் தலைவனே! வெற்றியுடைய சரவணபவனே! 3

**செங்கனி வாய்வரை மங்கை சௌந்தரி**
**திங்க ளியங்குமதி**
**சித்ர நகைச்சிவ சத்தி பருப்பதி**
**செப்பு முகைக்குமரி**
**மங்குலின் விஞ்சிய கொந்தள வம்பிகை**
**மஞ்சுள மாமகிஷ**
**மர்த்தனி நிர்த்தனி பத்மினி சற்குணி**
**மன்னு பணாபரணி**

**துங்க துரந்தரி யிங்கித மங்கள**
**சுந்தரி வாமிமகா**
**சுத்த மெய்ஞ்ஞான சொரூபி பவானி**
**சுதந்தரி முதன்மாதா**
**எங்கு நிறைந்த நிரந்தரி நந்தன**
**வென்ற னுயிர்த்துணைவ**
**இருடிக ணாத சுரேச வெனக்கரு**
**ளிடுசர வணபவனே.**

*செங்கனி வாய் வரைமங்கை சௌந்தரி*
*திங்கள் இயங்கும் அதி*
*சித்ர நகைச் சிவசத்தி பருப்பதி*
*செப்பு முகைக் குமரி*
*மங்குலின் விஞ்சிய கொந்தள அம்பிகை*
*மஞ்சுள மாமகிஷ*
*மர்த்தனி நிர்த்தனி, பத்மினி சற்குணி*
*மன்னு பண ஆபரணி*
*துங்க துரந்தரி இங்கித மங்கள*
*சுந்தரி வாமிமகா*
*சுத்த மெய்ஞ்ஞான சொரூபி பவானி*
*சுதந்தரி முதன்மாதா*
*எங்கு நிறைந்த நிரந்தரி நந்தன*
*என்றன் உயிர்த் துணைவ*
*இருடிகள் நாத சுரேச எனக்கு அருள்*
*இடு சரவணபவனே.*

சிவந்த பழம் போலும் வாயுடைய மலை மங்கை. சௌந்தரி; நிலவு ஒளி செய்யும் மிக்க அழகிய பற்களுடைய சிவசக்தி பார்வதி; செப்புப் போன்ற தனமுடைய குமரிப்பெண்; மேகத்தை விஞ்சிய கரிய கூந்தலுடைய அம்பிகை; அழகி; பெரிய மகிஷாசுரனைக் கொன்றவள்; கூத்தினைப் புரிபவள்; பத்மினி என்பவள்; சற்குணமுடையவள்; நிலைபெறும் பாம்புகளை அணிகலன்களாக அணிந்தவள்; உயர்ந்த வல்லமையுடையவள்; இனிய மங்களமான சுந்தரி; சிவனாரின் இடப்பாகத்தாள்; தூய மெய்யறிவின் சொரூபமானவள்; பவானி என்பவள்; சுதந்திரம் உடையவள்; முதன்மையான அன்னை; எங்கும் நிறைந்த நிரந்தரமானவள் என்னும் இத்தகையவளின் புதல்வனே, எனது உயிர்க்குத் துணைவனே! ரிஷிகளின் தலைவனே! தேவர்களின் கடவுளே! அடியேனுக்கு அருள்புரிந்திடும் சரவணபவனே! 4

**சேம நலங்கிளர் சாமளை கோமளை**
**சீலி மகாநூலி**
**செல்வ ஹிமாசல செல்வி யகாரி**
**சிகாத வகோரிநறுங்**
**கோமள கும்ப பயோதர சண்டிகை**
**கோல வராகிசத**
**கோடி ரவிப்ரபை வீசு முடிப்பர**
**குடிலை யருட்புவனை**
**மாமலம் வெந்தழி யீம மிருந்திடு**
**மாதரி யெண்டோளி**
**மயிலை விழிக்கரு ணாகரி நந்தன**
**மால்பிர மர்க்கரிய**
**சாமி யெனுஞ்சய வீர வரோதய**
**சமய சகாயவருட்**
**சாகர மாமொரு நாத வெனக்கரு**
**டருசர வணபவனே.**

சேம நலம் கிளர் சாமளை கோமளை
சீலி மகாநூலி
செல்வ ஹிமாசல செல்வி அகாரி
சிகாத அகோரி நறும்
கோமள கும்ப பயோதர சண்டிகை
கோலவராகி சத
கோடி ரவிப்ரபை வீசு முடிப் பர
குடிலை அருள்புவனை
மாமலம் வெந்து அழி ஈமம் இருந்திடு
மாதரி எண் தோளி
மயிலை விழிக் கருணாகரி நந்தன
மால் பிரமர்க்கு அரிய
சாமி எனும் சய வீர வரோதய
சமய சகாய அருள்
சாகரமாம் ஒரு நாத எனக்கருள்
தரு சரவணபவனே.

இன்பமாகிய நன்மை விளங்கும் சாமளை; கோமளை; நற்குணத்தாள்; பெரிய நூலுடையவள்; செல்வம் பொருந்திய

**5. சண்டிகை** = காளி; இங்கே சிவசத்திக்காயிற்று. காளி பெயர் துர்க்கை பெயர் காணுந்தோறும் இப்பொருள் கோடலே மரபாம்.

இமயமலைக்குரிய செல்வி; கடவுள்; நெருப்புப்போலும் மிகச் சினமுடையாள்; நல்ல இளமையான குடம்போல் தனமும், வயிறும் உடைய காளி; அழகிய வராகி; நூறு கோடி சூரிய ஒளி வீசுகின்ற முடியுடையாள்; மேலான பிரணவம் அருளும் புவனத்தாள்; பெரிய குற்றம் வெந்து அழியும் சுடுகாட்டில் இருந்திடும் பத்திரகாளி; எட்டுத் தோள்களுடையவள்; கருமையும், வெண்மையும் உடைய திருக்கண்களுடைய (அ) மீன் போலும் திருக்கண்களுடைய கருணையுடையவள் என்று இவ்வாறெல்லாம் புகழப்படும் தேவியின் புதல்வனே! திருமால், பிரமன் முதலானவர்களும் காண்பதற்கு அரிய சாமி எனும் வெற்றி வீரனே! வரங்களைத் தோற்றுவிப்பவனே! தக்க சமயத்தில் உதவியருள்பவனே! அருட்பெருங்கடலாகும் ஒப்பற்ற தலைவனே! அடியேனுக்கு அருள்புரியும் சரவணபவனே! 5

**பாம்பணி யந்தரி யந்தர வும்பர்**
**படர்ந்து வணங்கமரி**
**பாமக ளுஞ்சுக சீமக ளும்விரி**
**பார்மக ளும்புகழுஞ்**
**சாம்பவி யெண்குணி யோங்குபு ராந்தகி**
**சந்தத கல்யாணி**
**தாதகி சண்பக மாலிகை புனைகுண**
**சாலி மகாசூலி**
**காம்பர விந்த வயற்றரு தந்தைம**
**காகடல் வண்ணனரிக்**
**கண்ண னெனுந்திரு விண்டு சகோதரி**
**காதல வோமுருக**
**தேம்பொலி நீப வலங்கன் மிலைந்திடு**
**செந்திறன் மொய்ம்பவருஞ்**
**சேகர சேகர தேவ வெனக்கருள்**
**சிவசர வணபவனே.**

பாம்பு அணி அந்தரி அந்தர உம்பர்
படர்ந்து வணங்கு அமரி
பாமகளும் சுகசீமகளும் விரி
பார்மகளும் புகழும்
சாம்பவி எண்குணி ஓங்கு புராந்தகி
சந்தத கல்யாணி
தாதகி சண்பக மாலிகை புனைகுண
சாலி மகா சூலி

*காம்பு அரவிந்த அயன்தரு தந்தை ம*
*கா கடல் வண்ணன் அரிக்*
*கண்ணன் எனும் திருவிண்டு சகோதரி*
*காதல ஓ முருக*
*தேம்பொலி நீப அலங்கல் மிலைந்திடு*
*செந்திறல் மொய்ம்ப அரும்*
*சேகர சேகர தேவ எனக்கு அருள்*
*சிவ சரவணபவனே.*

பாம்புகளை அணியும் பார்வதி! வானுலகத் தேவர்கள் வந்து வணங்கும் துர்க்கை! கலைமகளும் இன்பமுடைய திருமகளும், பரந்த நிலமகளும் புகழ்ந்து போற்றும் சாம்பவி; எட்டுக் குணமுடையாள்! உயர்ந்த திரிபுரத்தை அழித்தவள்! எப்போதும் மணமுடையவள்; ஆத்தி, சண்பகம் முதலிய மலர்மாலை அணிந்தவள்; குணசாலி; மகாசூலி; தண்டுடைய தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனின் தந்தையான பெரிய கடல் நிறத்தவன், அழகிய கண்களுடையவன் எனும் திருவிஷ்ணுவின் சகோதரியின் அன்பு மகனே! ஓ முருகா! தேன் விளங்கும் கடப்ப மாலையைச் சூடிடும் செவ்வையான வலிமையுடைய திருத்தோள்களுடையவனே! அரிய அழகுடைய திருமுடியுடைய கடவுளே! அடியேனுக்கு அருளும் சிவசரவணபவனே! 6

**ஆகவ வீர நிசாசர யூக**
**மழுங்கி மடிந்திடவும்**
**ஆதவ னம்புலி நாகம் வசுந்தரை**
**யாவு நலங்கொளவும்**
**மாகர் வணங்கு திகம்பரி திரிபுரை**
**வண்டன வமுதுணவும்**
**மலைவிலி தந்த மகாசுக சுந்தர**
**மைந்த மகாமௌன**
**யோக கிருபாகர சாகர தேசிக**
**வோவிய வேலவநல்**
**லொண்மை மிகுஞ்சிவ சம்பிரம சங்கர**
**வொளிர்பதி னெண்கண்ண**
**ஏக பராபர சீவ தயாபர**
**வென்று மிளங்குமர**
**என்னுயிர் நாயக மாகிய மாமயி**
**லிவர்சர வணபவனே.**

ஆகவ வீர நிசாசர யூக
மழுங்கி மடிந்திடவும்
ஆதவன் அம்புலி நாகம் வசுந்தரை
யாவு நலங் கொளவும்
மாகர் வணங்கு திகம்பரி திரிபுரை
வண்தன அமுது உணவும்
மலைவிலி தந்த மகாசுக சுந்தர
மைந்த மகா மௌன
யோக கிருபாகர சாகர தேசிக
ஓவிய வேலவநல்
ஒண்மை மிகும் சிவ சம்பிரம சங்கர
ஒளிர் பதினெண் கண்ண
ஏகபராபர சீவ தயாபர
என்றும் இளங்குமர
என் உயிர் நாயகம் ஆகிய மாமயில்
இவர் சரவணபவனே.

போர் வீர அசுரர் படைவகுப்புக்கள் பொலிவழிந்து இறந்து போகவும், சூரியன், சந்திரன், மலைகள், பூமி ஆகிய யாவும் நன்மை பெறவும், தேவர்கள் தொழும் பார்வதி, திரிபுரை, வளமான தனங்களில் அமுதுண்ணவும், மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான் தன்னுடைய நெற்றிக் கண்களிலிருந்து தோற்றுவித்த பேரின்பமான அழகிய மைந்தனே! பெரிய மௌன யோகமுடைய கருணாகரனே! கடலே! ஞானாசிரியனே! ஓவியம் போலும் அழகுடைய வேலவனே! நல்ல அறிவு மிகுந்த சிவானந்தமே! சங்கரனே! ஒளிவீசும் பதினெட்டுத் திருக்கண்கள் உடையவனே! ஒரு பரம்பொருளே! உயிர்களிடம் அன்புடையவனே! எப்போதும் இளங்குமரனாக உள்ளவனே! பெரிய மயில்வாகனத்தில் ஏறிச் செலுத்தும் என் உயிர்த் தலைவனாகிய சரவணபவனே! 7

**குழவி விதுக்கிடை நம்ப னறும்புனல்**
**கொன்றை யணிந்தசிவன்**
**குஞ்சித பாத னெனுஞ்சபை நாதன்மு**
**குந்த னவாமுசித**
**அழகொமு குங்குக சாரச லோசன**
**னான வருந்தமனும்**
**அறைமறை வாணியி னார்வல நான்முக**
**வந்தண னும்புகழுங்**

8. **சாரசம்** = தாமரை; ஸாரஸம் வடசொல்.

**கழலயி ராணி யனாமய வாரணி**
**காரணி நாரணியொண்**
**கைலையை யாள்சிவ காமி சுகேசுரி**
**கான்முளை யாயமரர்**
**தொழவுள சண்முக தேவ கிராதர்**
**சுவாமி யெனப்பணியுஞ்**
**சோதி நிலாவு சொரூப வெனக்கருள்**
**சுகசர வணபவனே.**

குழவி விதுக்கிடை நம்பன் நறும் புனல்
கொன்றை அணிந்த சிவன்
குஞ்சிதபாதன் எனும் சபை நாதன் மு
குந்தன் அவாம் உசித
அழகு ஒழுகும் குக சாரக லோசனன்
ஆன அரும் தமனும்
அறை மறை வாணியின் ஆர்வல நான்முக
அந்தணனும் புகழும்
கழல் அயிராணி அனாமய ஆரணி
காரண நாரணி ஒண்
கைலையை ஆள் சிவகாமி சுகேசுரி
கான்முளையாய் அமரர்
தொழ உள சண்முக தேவ கிராதர்
சுவாமி எனப் பணியும்
சோதி நிலாவு சொரூப எனக்கு அருள்
சுக சரவணபவனே.

பிறை நிலவைச் சடையிற் சூடிய நம்பனும் நறிய நீராகிய கங்கையையும் கொன்றை மாலையையும் அணிந்தவனுமாகிய சிவன், குஞ்சிதபாதம் எனும் பொன்னம்பல நாதனும் முகுந்தனும் விரும்பும் உசிதமான அழகு ஒழுகும் குகனே! தாமரைக் கண்கள் உடையவனான அரிய கிருட்டிணனும் வேதங்கள் கூறும் கலைமகளின் காதலனாகிய பிரமதேவனும் புகழும், வீரதண்டை அணிந்த அயிராணி, (பார்வதி) நோயில்லா ஆரணி, (காளி) கார்ணி, நாரணி, ஒளி பொருந்திய திருக்கயிலாயமலையை ஆளுகின்ற சிவகாமி, சுகேசுரி ஆகிய பல திருப் பெயர்களுடைய தேவியின் புதல்வனாய் தேவர்கள் தொழ உள்ள சண்முகக் கடவுளே! வேடர்களின் சுவாமியே என வணங்கும் ஒளி நிலவும் சொரூபனே! அடியேனுக்கு அருளுக இன்ப சரவணபவனே! 8

**ஏர்பெரு குந்தட லங்கையை யாளு**
**மிராவண காதகன்வல்**
**லிகல்கெட வேயடர் கீசக சேனையொ**
**டேகிய ரகுராமன்**
**பார்புகழ் பஞ்சவர் நேச சகாயகொ**
**பால பிரான்மருக**
**படரறு கசமுக னுரனிமிர் சிவகண**
**பதியிறை மகனாயி**
**சீர்வளர் பருவத வர்த்தனி நந்தன**
**சிவபிர ணவசாமி**
**சிவசம யவுறுவர் கருது மஹேச**
**சிலம்பல றுஞ்சரண**
**நீர்நில மாருத மாதிர மழலுயிர்**
**நிலவிருள் வலிகளிடை**
**நிறைசரு வேச குமார வெனக்கரு**
**ணிஜசர வணபவனே.**

*ஏர் பெருகும் தட லங்கையை ஆளும்*
*இராவண காதகன் வல்*
*இகல் கெடவே அடர் கீசக சேனையொடு*
*ஏகிய ரகுராமன்*
*பார்புகழ் பஞ்சவர் நேச சகாயகொ*
*பால பிரான் மருக*
*படர் அறு கசமுகன் உரன் நிமிர் சிவகண*
*பதி இறை மகன் ஆயி*
*சீர்வளர் பருவத வர்த்தனி நந்தன*
*சிவபிரணவ சாமி*
*சிவசமய உறுவர் கருத மஹேச*
*சிலம்பு அலறும் சரண*
*நீர்நில மாருத மாதிரம் அழல் உயிர்*
*நிலவு இருள் வலிகள் இடை*
*நிறை சருவேச குமார எனக்கு அருள்*
*நிஜ சரவணபவனே.*

அழகு பெருகும் பெரிய இலங்கையை ஆளும் இராவணனான கொலைகாரனின் வலிய வீரம் ஒழிய நெருங்கிய குரங்குப் படையுடன்

சென்ற இரகுராமன், உலகம் புகழும் பஞ்சபாண்டவர்களின் அன்புத் தோழன் கோபாலன் ஆகிய கடவுள் மருகனே! துன்பம் ஒழிக்கும் யானை முகத்தோன், அறிவோங்கு சிவகணபதி கடவுளான மகனின் தாயாகிய, அழகுவளர் பருவதவர்த்தினியின் புதல்வனே! சிவபிரணவ சாமி! சிவசமய முனிவர் நினைக்கும் மகேசனே! சிலம்பு ஒலிக்கும் திருவடியுடையவனே! நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு, உயிர், நிலவு, சூரியன் ஆகிய எட்டிடத்தும் நிறைந்த சருவேசுரனே! குமரனே! அடியேனுக்கு அருளும் மெய்யான சரவணபவனே! 9

**ஓதிம மேசில் பிகஞ்சிவ றூதுண**
**மொகர முலாவுவளம்**
**உயரொர் சிவேதை மலைக்குறு முனிவ**
**னுவந்து பணிந்தபத**
**நாத வுபாசகர் நேச கிருபாகர**
**நாயக மாமௌன**
**ஞான நிதான சதாசிவ தாரக**
**நாயகி மாதேவி**
**காதல பாதல பூதல மீதல**
**காரண மாயைமுதால்**
**கருணை மலர்ச்சியி னருண கிரிக்கொரு**
**கதியருள் சிற்கடவுள்**
**பூத சைந்ய புராண புராதன**
**போத விலாசவருட்**
**போக சமாச விசாக வெனக்கருள்**
**புரிசர வணபவனே.**

ஒதிமம் ஏசில் பிகம் சிவல் தூதுணம்
ஒகரம் உலாவு வளம்
உயர் ஒர் சிவேதை மலைக் குறுமுனிவன்
உவந்து பணிந்த பத

**10. ஓதிமம்** = அன்னம். **பிகம்** = குயில் **சிவல்** = சிவலென்னும் பறவை. **தூதுணம்** = புறா. **ஒகரம்** = மயில் **சிவேதைமலை** = தென்மலை; **சிவேதை** = தெற்கு. **பூதசைந்யம் –** வடநூன் முடிபு. **சைந்யம்** = சேனை.

நாத உபாசகர் நேச கிருபாகர
நாயக மாமௌன
ஞான நிதான சதாசிவ தாரக
நாயகி மாதேவி
காதல பாதல பூதல மீதல
காரண மாயை முதால்
கருணை மலர்ச்சியின் அருணகிரிக்கு ஒரு
கதி அருள் சிற் கடவுள்
பூத சைந்ய புராண புராதன
போத விலாச அருள்
போக சமாச விசாக எனக்கு அருள்
புரி சரவணபவனே.

அன்னம், குற்றமில்லாத குயில், சிவல், புறா, மயில் ஆகிய பறவைகள் உலாவும் வளம் மிகுந்த தென்மலை என்னும் பொதிகைமலைக் குறுமுனி என்னும் அகத்திய முனிவர் மகிழ்ந்து வணங்கிய திருவடியுடையவனே! தலைவனே! உன்னை வழிபடுவோரின் அன்பனே! கருணாகரனே! தலைவனே! பெரிய மௌன ஞானமுடைய சம நிலையுடையவனே! சதாசிவனே! பிரணவமானவனே! தலைவி மாதேவி அன்பனே! பாதலம், மண்ணுலகம், விண்ணுலகம் ஆகியவற்றின் காரணனே! மாயையின் முதல்வனே! கருணைத் தோற்றத்தில் அருணகிரிநாதருக்கு ஒரு பரகதியை அருளிய அறிவுக்கடவுளே! பூதப் படையுடையவனே! புராணங்கட்குரியவனே! பழைமையானவனே! அறிவழகனே! அருள் நுகர்வுக் கூட்டமாக உள்ள விசாகனே! அடியேனுக்கு அருள்புரியும் சரவணபவனே! 10

| | |
|---|---|
| ***ஆகப்பிரபந்தம் இருபத்து மூன்றினும் போந்த திருப்பாடல்*** | ***201*** |
| ***தெய்வ வணக்கச் செய்யுள்*** | ***3*** |
| ***ஆகத் திருப்பாடல்*** | ***204*** |